**முன்னேற்றமடைந்துவரும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் - 2024**

------------------------------------------------------------------------------------------------------------------------

முன்னேற்றமடைந்துவரும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூலை 07 ஆம் திகதிய எஸ்எல்-பி116 எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையிலுள்ள 4 ஆம் பிரிவின் 6(ஆ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் 04 மாகாணங்களின் மாகாண சபைகள் அமுல்படுத்தல் முகவர்களாக உள்ளன.

அடிப்படை உட்கட்டமைப்பை முன்னேற்றுவதனூடாக மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல் மற்றும் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 20,622 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 15,409 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 17,185 மில்லியனுக்குச் சமமான ஜப்பான் யென் 12,957 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 3,474 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 2,452 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2017 யூலை 07 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூலை 07 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2028 ஆகஸ்ட் 22 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நி-கழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | தொகை<br>ரூபா. | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் 21 இன் 39(அ) பந்திக்கமைய, செயற்திட்டத்தின் வெளிநாட்டுக் கடனுடன் தொடர்புடைய ரூபா. 178,086,652 பெறுமதியான சமநிலைச் சீராக்கல், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படவில்லை. | 178,086,652 | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் திறைசேரி அறிவுறுத்தல்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளன. | இலங்கை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்பட வேண்டும். |

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதி செயலாற்றல்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வெளிநாட்டு நிதியங்களைப் பயன்படுத்துதல்.**<br>செயற்திட்ட அமுலாக்க கால அட்டவணையின்படி, 2024 ஏப்ரல் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்த செயற்திட்டக் காலப்பகுதியில் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக ரூபா 17,185 மில்லியனுக்கு சமனான ஜப்பானிய யென் 12,957 மில்லியன் செலவிடப்பட வேண்டியிருந்தது. இருப்பினும், 2024 திசெம்பர் 31 வரை ரூபா 5,746 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு நிதியின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் 33 சதவீதமாகும். | செயற்திட்ட அமுலாக்க கால அட்டவணையின்படி, செயற்திட்டக் காலத்தின் இறுதிக்குள் ரூபா 17,148 மில்லியனுக்குச் சமனான ஜப்பானிய யென் 12,957 மில்லியன் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காகச் செலவிடத் திட்டமிடப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் திருத்தப்பட்ட வேலைத் திட்டத்திற்கிணங்கஇலக்குகளை அடைவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | **இலங்கை அரசாங்க நிதியைப் பயன்படுத்துதல்**<br><br>செயற்திட்ட அமுலாக்கல் அட்டவணையின்படி, செயற்திட்டக் காலமான 2024 ஏப்ரல் 30 முடிவடையும் போது, செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக மொத்தம் ரூபா.3,474 மில்லியன் செலவிடப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், 2024 திசெம்பர் 31 வரை ரூபா.1,311 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. இதன்படி, 2024 திசெம்பர் 31 வரை இலங்கை அரசாங்க நிதியின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் 38 சதவீதமாகும். | கொவிட்-19 தொற்றுப்பரவல், பொருளாதார நெருக்கடி, கடன் இடைநிறுத்தங்கள் மற்றும் ஊழியர் குறைப்பு போன்ற காரணிகளால் செயற்திட்ட முன்னேற்றத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இது இலங்கை அரசாங்க நிதியின் பயன்பாடு குறைவடைவதற்குக் காரணமாக அமைந்துள்ளது. | திருத்தப்பட்ட திட்ட வேலைத்திட்டத்தின்படி இலக்குகளை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 பௌதீக முன்னேற்றம்

### 3.2.1 உப செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 நிலவரப்படி 9 நீர் வழங்கல் உபசெயற்திட்டங்களில் 16-58 சதவீத முன்னேற்றம் மட்டுமே எட்டப்பட்டுள்ளது | ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (JICA) தனது நிதி இடைநிறுத்தத்தை நீக்கியுள்ளதுடன், பகுதியளவில் நிறைவடைந்த உபதிட்டங்களை மீண்டும் ஆரம்பிக்கும் பணிகளில் செயற்திட்டம் ஈடுபட்டுள்ளது. அனைத்து உபசெயற்திட்டங்களும் திருத்தப்பட்ட வேலைத் திட்டத்தின்படி பூர்த்தி செய்யப்படும். | திருத்தப்பட்ட வேலைத் திட்டத்திற்கு இணங்க வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கிராமப்புற வீதி உபசெயற்திட்டங்கள் 2024 திசெம்பர் 31 நிலவரப்படி 30 கிராமப்புற வீதி உபசெயற்திட்டங்களில் 01-71 சதவீத முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது | | |
| (இ) | விவசாய நீர் உபசெயற்திட்டங்கள் 2024 திசெம்பர் 31 நிலவரப்படி, 12 விவசாய நீர் உபசெயற்திட்டங்களில் 0-80 சதவீத முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. | | |

### 3.2.2 நிறைவுசெய்யப்படாத நிர்மாணங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | BOQ - B(III) 3.6 இன் படி, காரைநகர் தென்மேற்கு வீதியின் (1.61 கி.மீ) சிமெண்ட் கொங்கிரீட் தளம் 1041 மீற்றர் நீளத்திற்கு மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த வீதி அமைக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறவில்லை. BOQ - B(III) 3.2 இன் படி, வீதியின் கொங்கிரீட் இடப்பட்ட ஓரப்பகுதிகளில் கிரவல் இட்டு நிரப்பப்படவில்லை. இதனால் எதிர்காலத்தில் வீதி சேதமடையக்கூடும் என அவதானிக்கப்பட்டுள்ளது. BOQ - B(III) 5 இன் படி ஒரு மதகு மற்றும் ஏனைய கட்டமைப்புகள் அமைக்கப்படவில்லை. இதன் காரணமாக அந்தப் பகுதியில் மழைநீர் தேங்கி நிற்பதுடன், பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். BOQ - B(III) 5.5 இன் படி: ஹியூம் குழாய் இடுதல் மற்றும் பாதுகாப்பு கல் பொருத்துதல் ஆகியவற்றின் கீழ், 60 பாதுகாப்பு கற்கள் செதுக்கப்படவில்லை இது விபத்துகளுக்கு வழிவகுக்கலாம். | இந்தத் தொகுப்பில் மொத்தம் 03 வீதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தம் தற்போது வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது. செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான செயல்முறைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இருப்பினும், எஞ்சிய பணிகளை முடிக்க ஒப்பந்தக்காரர் விருப்பம் காட்டவில்லை. எனவே, ஒப்பந்த நிபந்தனைகளின்படி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் திருத்தப்பட்ட வேலைத் திட்டத்தில் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. | பயனாளிகளின் வசதிக்காக கட்டுமானப் பணிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கிராமப்புற நீர் வழங்கல் திட்டங்களுக்காக UPVC D1 குழாய்களை வழங்குதல், பொருத்துதல் மற்றும் விசேட வேலைப்பாடுகள் முடிக்கப்பட்டு, 26 ஜனவரி 2023 அன்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டது.செயற்திட்டத்தின் நோக்கம் 800 வீடுகளுக்கு நீர் இணைப்புகளை வழங்குவதாக இருந்தபோதிலும், தாலிக்குளம் மற்றும் சொஹலபுலியன்குளம் கிராமங்களில் 207 வீடுகளுக்கு மாத்திரமே நீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. | செயற்திட்டம் முடிக்கப்பட்டு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திட்டத்தின் நிதி இருப்புக்கு ஏற்ப மேலதிக தேவைகள் குறித்து பரிசீலிக்கப்படும். | திட்டமிட்டபடி கட்டுமானப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட வேண்டும். |

### 3.2.3 களப்பரீட்சிப்பின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வெல்ஹின்ன-கிரிதல்பொத்த வீதியின் மேம்பாட்டிற்காக ரூபா 117,002,435 நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் கீழ் 4.3 கி.மீ நீளமான வீதி மேம்படுத்தப்பட்ட போதிலும், 1.7 கி.மீ நீளத்திற்கு மட்டுமே ABC இடப்பட்டு அடிப்படை அஸ்பால்ட் கலவை பூசப்பட்டுள்ளது. அங்குள்ள கொங்கிரீட் கற்கள் பெயர்ந்து குழிகள் உருவாகியுள்ளதுடன், வீதி பயன்படுத்த முடியாத நிலையில் சிதைவடைந்துள்ளது. மேலும், வீதியின் ஆரம்பம் முதல் 2.6 கி.மீ புள்ளி வரை, $184.8m^2$ சதுர மீற்றர் (46.2x4) பரப்பளவு அபிவிருத்தி செய்யப்படாமல் உள்ளது. | கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள், செயற்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் போது சரிசெய்யப்படும். | செயற்திட்டமிட்டபடி கட்டுமானப் பணிகளை நிறைவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மொனராகலை மாவட்டத்தில் உள்ள அம்பாறை 5ஆம் கட்டை பாஸ்கிவுல ஓயா வீதியை மேம்படுத்துவதற்காக, 2020 ஆகஸ்ட் 03 அன்று ரூபா 130,023,190 பெறுமதியான ஒப்பந்தம் ஒரு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டது. இருப்பினும், பாஸ்கிவுல ஓயாவின் குறுக்கே பாலம் ஒன்று அமைக்கப்படவில்லை. இதன் விளைவாக பொதுமக்களும் வாகனங்களும் பயணங்களின் போது பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். | வேலைகள் முடிக்கப்பட்டு வேலைகொள்வோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் எல்லைக்குள் பாலம் அமைக்கும் பணி உள்ளடக்கப்படவில்லை. | கட்டுமானப் பணிகளை முழுமையாக நிறைவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |